**PDM COURT, SANKARANKOVIL**

**தேதி 24.08.2023**

**அசல் வழக்கு எண். 362/2015**

**பி.வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் தபசில் சொத்தை வா.சா.ஆ–1 ஆவணம் மூலம் 1ம் வாதியால் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். அதே தேதியில் 1ம் தபசில் சொத்திற்கு மேற்குபுறம் உள்ள சொத்தை வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்றசொத்து 1ம் வாதி கிரையம் பெற்ற சொத்து ஆதியில் வெங்கடாஜலம் ஐய்யர் வகையறாக்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்தில் எலுமிச்சை மரம் உள்ளது என்றால் சரிதான். அந்த எலுமிச்சை மரம் 35 ஆண்டுகளாக இருந்துவருகிறது. வழக்கு சொத்துக்களுக்கு என் பெயரிலும் 1ம் வாதி பெயரிலும் பட்டா எண் 158ன் கீழ் கூட்டுப்பட்டா உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய வா.சா.ஆ–2 கிரைய பத்திரத்தில் கண்ட சொத்திற்கு கிழக்கு மாலாக 1ம் வாதி கிரையம் பெறற சொத்து உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் வாதி கிரையம் பெற்ற வா.சா.ஆ–1 பத்திரத்தில் கண்ட சொத்திற்கு மேற்குபுற மாலாக நான் கிரையம் பெற்ற சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் வாதி வா.சா.ஆ–1 ஆவணத்தில் 50 செண்ட் இடத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ–2 ஆவணம் மூலம் 2 ஏக்கர் இடத்தை நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

2) 1ம் வாதி கிரையம் பெற்ற வா.சா.ஆ–1 பத்திரத்திலும் நான் கிரையம் பெற்ற வா.சா.ஆ–2 பத்திரத்திலும் கண்ட விஸ்தீரணங்கள் மற்றும் மால்கள் சரியானதுதான் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் கருப்பையா என்ற தாசன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற வா.சா.ஆ–2 பத்திரத்தில் கருப்பையா என்ற தாசன் குமாரத்தி பார்வதி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தை பொறுத்து நானும் 1ம் வாதியும் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 222/97 வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பு அளிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கிலும் என்னை கருப்பையா என்ற தாசன் குமாரத்தி என்றுதான் 2ம் வாதியாக காட்டப்பட்டது என்றால் சரிதான்.

இந்த வழக்கில் 2ம் வாதியான மரியபாக்கியம் என்னுடன் உடன் பிறந்த மூத்தசகோதரி என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து 3 பெண் பிள்ளைகள் மற்றும் 3 ஆண் பிள்ளைகள். எனது தாயார் பெயல் செல்வம். எனது பாட்டி பெயர் மகமாயி என்றால் சரிதான். மேற்சொனன் மகமாயிக்கு எனது தாயார் செல்வமும் மற்றும் பாக்கியம் என்ற இரண்டு பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். மகமாயிக்கு பிறந்த ஆண் பிள்ளைகள் பெயர் குருபாதம், சாமுவேல் மற்றும் 1ம்வாதி வேதநாயகம் என்றால் சரிதான்.

3) என்னுடன் பிறந்த மற்றொரு சகோதரி பெயர் தங்கம்மாள் என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்து எனது தாய்வழி பாட்டனரான சோபனா என்ற குருந்தன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்து எனது தாயாருக்கும் அவர்களது குடும்பத்தார்களுக்குள் ஏற்பட்ட வாய்மொழி பாகத்திற்கு ஏற்பட்டது என்றால் சரிதான். எனது தாயார் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். எனக்கு சுமார் 10 வயது இருக்கும் எனது தாயார் இறந்துவிட்டார். எனது தாயாருக்கு கிடைத்த 2ம் தபசில் சொத்தை எனக்கும் 2ம் வாதிக்கும் குடும்ப ஏற்பாட்டில் கிடைத்தது என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்தை நானும் 2ம் வாதியும் பாகம் பிரிக்காமல் அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்தை நானும் 2ம் வாதியும் பிரித்து கொள்வது எனக்கு ஆட்சேபணை இல்லையென்றால் சரிதான். நான் தாக்கல் செய்த சீர்திருத்த எதிர்வழக்குரையில் கண்ட 2ம் தபசில் சொத்து இந்த வழக்கில் வழக்கிடை சொத்தாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். நானும் 1ம் வாதியும் வா.சா.ஆ1 மற்றும் 2 ஆவணங்களில் கிரையம் பெற்ற இரண்டு சொத்துகளையும் சீர்திருத்த எதிர்வழக்குரையில் கண்ட 1ம் தபசில் சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். சிர்திருத்த எதிர்வழக்குரையில் கண்ட 1ம் தபசில் சொத்து எனக்கு மட்டும் பாத்தியப்பட்டது என விளம்புகை கோரி எதிர்கோரிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். எதிர் வழக்குரை 2ம் தபசில் சொத்தை என்னிடம் இருந்து ஏமாற்றி வாதிகள் மோசடியாக கிரையம் பெற்றுவிட்டார்கள் என்று அந்த ஆவணத்தை ரத்துசெய்யக்கோரி நான் இந்த வழக்கில் எதிர்கோரிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இனிமேல்தான் தாக்கல் செய்யவேண்டும்.

4) 28.04.2015 அன்று நான் எனது மகனான 2ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ–3 ஆவணத்தில் நான் எனது மகனான 2ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் 1ம் வாதி கிரையம் பெற்ற 50 செண்டையும், எனது தாய்வழி மூலம் கிடைத்த பிராது 2ம் தபசில் சொத்து மொத்த விஸ்தீரத்தையும் சேர்த்து தான் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வாதிகள் என்னிடமிருந்து பி.வா.சா.ஆ 3 ஆவணத்தை மோசடியாக எழுதி வாங்கிகொண்டார்கள் என்பதற்காக நான் வாதிகளுக்கு எதிராக காவல்நிலையத்திலோ அல்லது நீதிமன்றத்திலோ எந்த பரிகாரமும் கோரி கொள்ளவில்லையென்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யபிறகு பி.வா.சா. ஆ 3 ஆவணத்தையும் ரத்துசெய்யக்கோரி நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றால் சரிதான். பரிவர்த்தனை பத்திரம் பதிவு செய்யப்படும் போது அந்த ஆவணத்தில் கண்ட 2 தரப்பினர்களுக்கும் தனித்தனி பத்திரம் கொடுக்கப்படும என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணம் பதிவு செய்யப்பட்ட போது கழுகுமலை சார்பதிவாளர் அந்த ஆவணத்தை பதிவு செய்ய எனக்கு சம்மதமா என்று என்னை கேட்டார் என்றால் கேட்கவில்லை. 1ம் தபசில் சொத்தை 1ம் வாதி எனக்கு எந்த உரிமை மாற்றம் ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லையென்றால் சரிதான். 1ம் தபசில் சொத்தை 1ம் வாதி எனக்கு பரிவர்த்தனை செய்து கொடுப்பதாக சொல்லி பிறகு பரிவர்த்தனை செய்து கொடுக்காமல் என்னை ஏமாற்றிவிடடதாக 1ம் தபசில் சொத்தை 1ம் வாதி எனக்கு கிரையம் கொடுக்கவில்லையென்று நான் எந்த பரிகாரமும் கோரி நான் வழக்கு தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான்.

5) 1ம் தபசில சொத்தை 1ம் வாதி 12.03.1998 அன்று என்னிடம் ஒப்படைத்துவிட்டதாக நான் சொல்லியுள்ளதற்கு என்னுடைய வாய்மொழி சாட்சியத்தை தவிர எழுத்து மூலமான ஆதாரம் எதுவும் இல்லையென்றால் சரிதான். நான் சொல்லும் 12.03.1998 தேதிக்கு பிறகும் 1ம் தபசில் சொத்திற்கு என் பேரிலும் தனிப்பட்டா வழங்கக்கோரி வருவாய் அதிகாரியிடம் மனு எதுவும் கொடுக்கவில்லையென்றால் சரிதான. இன்றைய தேதிவரை 1ம் தபசில் சொத்திற்கு கூட்டுப்பட்டாவாகதான் இருந்து வருகிறது என்றால் சரிதான். 1ம் தபசில சொத்தை 1ம் வாதி எனக்க பரிவர்த்தனை செய்துகொடுப்பதாக சொன்ன விபரம் என்னை தவிர

வேறுயாருக்காவது தெரியுமா என்றால் என் சகோதரர் வெள்ளைச்சாமி என்பவருக்கும் வேறொரு நபரான பாலகிருஷ்ணன் என்பவருக்கும் தெரியும். மேற்கண்ட பாலகிருஷ்ணன் தந்தை பெயர் எனக்கு தெரியாது. பரிவர்த்தனை பற்றி பஞ்சாயத்து நடந்த விபரம் மேற்சொன்ன வெள்ளளைச்சாமி மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோருக்கு தெரியும் என நான் என்னுடைய எதிாவழக்குரையில் சொல்லவில்லையென்றால் சரிதான். பரிவர்த்தனை பத்திரம் பதிவு செய்யப்ப்டடபோது 1ம் தபசில் சொத்து என் பெயரில் தான் பதிவு செய்யப்படுவதாக சார்பதிவாளர் என்னிடம் தெரிவித்தார். என் பெயரில் 1ம் தபசில் சொத்து பதிவு செய்யப்பட்டதாக சொல்லும ஆவணத்தை என்னிடம் கொடுக்கப்படும் படி நான் சார்பதிவாளரிடம் கேட்கவில்லையென்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணம் பரிவர்த்தனை பத்திரத்தின் அசல் ரவிகல்யாணசுந்தரம் என்பரிடம் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன ரவிகல்யாணசுந்தரம் எனது அக்கா மகன் அவரை நான் தான் சிறுவயதிலிருந்தே வளர்த்து வந்தேன் என்றால் சரிதான். எனக்கு திருமணமாகி குழந்தை இல்லாம இருந்த காலத்தில் எனது அக்கா மகனான ரவிகல்யாணசுந்தரத்தை 10 வயதிலிருந்தே நான் வளர்த்து வந்தேன். நானும் வாதிகளும் கூட்டுகுடும்பமாகத்தான் இருந்து வந்தோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ல் கண்ட சொத்தை பொறுத்து நாங்கள் எந்த பரிகாரமும் கோரிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ல் கண்ட சொத்தை பொறுத்து வாதிகள் எவ்வித பரிகாரமும் கோராததால் மேற்சொன்ன ரவிகல்யாணசுந்தரம் இந்த வழக்கிற்கு அவசிய கட்சி இல்லையென்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணம் நானும் வாதிகளும் கூட்டுக்குடும்பமாக ஒன்றாக இருந்த போது எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 கண்ட சொத்திற்கு ரவிகல்யாணசுந்தரம் பேருக்கு பட்டாவும் தீர்வையும் ஏற்பட்டுவிட்டது என்றால் பட்டா ஏற்பட்டுவிட்டது. தீர்வை ஏற்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது.

6) 1ம் தபசில் சொத்திற்கும் அதற்கு மேற்குபுறம் உள்ள சொத்திற்கும் என் பெயரிலுள்ள தீர்வை ரசீது நான் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணம் பரிவர்வத்தனை பத்திரம் என்று பதிவு செய்யப்ப்டவில்லையென்றாலும் நான் எனது அக்கா மகன் மீது இருந்த பாசத்தினால்

பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை எழுதிகொடுத்தேன் என்றாலும் சரியல்ல. அனைவரும கூட்டுக்குடும்பமாக இருந்தபோது அவர்கள் 50 செண்ட் கொடுப்பதாக சொன்னார்கள் அதனால் நான் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை எழுதிக்கொடுத்தேன். வாதிகளும் ரவிகல்யாணசுந்தமும பரிவர்த்தனை பத்திரம் எழுதிக்கொடுப்பதாக சொல்லி என்னை ஏமாற்றி விட்டார்கள் என்று மேற்சொன்ன பஞ்சாயத்தர்களான எனது அண்ணன் வெள்ளைச்சாமி மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோரிடமும் நான் தெரிவித்தேனா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிவர்த்தனை பத்திரம் என சொல்லி பதிவு செய்துவிட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. னெக்கு உரிமையில்லாத 1ம் தபசில் சொத்தை பொறுத்தும், முழு பாத்தியம் இல்லாத 2ம் தபசில் சொத்தை பொறுத்தும் நான் எனது மகன் பேருக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.3 ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் எழுதிக்கொடுத்த பிறகு எனக்கும் வாதிகளுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.,3 ஆவணத்தின் அடிப்படையில் முழு சொத்தும் எனக்கு பாத்தியப்பட்டது எனது மகன் வாதிகளிடம் தகராறு செய்தார் என்றால் சரியல்ல.வாதிகள் தான் தகராறு செய்தார்கள். வாசா.ஆ–3 எழுதிக்கொடுத்த 6 மாதத்தில் வாதிகளுக்கும் எங்களுக்கும் இடையே பிரச்சினை எற்பட்டது என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்து எங்களுடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதை காட்டுவதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்து 1ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும 1ம் தபசில் சொத்தை 1ம் வாதி அனுபவித்து வருவதை நாங்கள் இடையூறு செய்யக்கூடாது என்றாலும் அவர்கள்தான் எங்களுக்கு இடையூறு செய்து வருகிறார்கள். வாதிகள் எங்களுக்கு இடையூறு செய்துவருகிறார்கள் என்பதற்காக நான் வாதிகளுக்கு எதிரான நிரந்தர உறுத்து தடை பரிகாரம் கோரி எதிர் கோரிக்கை தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு நான் அனுப்பவில்லை. பி.வா.சா.ஆ.5 நடவடிக்கையை நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை 1ம் வாதி என்னை அடித்துவிட்டதாக குறிப்பு இல்லையென்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் உடல் வலி இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் காயம் இருப்பதாக குறிப்பு இல்லையென்றாலும் சரிதான். காவல் அதிகாரிகள என்னை

மருத்துவமனைக்கு என்னை பரித்துரைத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1ம் வாதி எனது தாய் மாமன் என்றால் சரிதான். அவர் எனது தாயாரின் தம்பி. வழக்கு சொத்தில் எனக்கு உரிமை இல்லையென்பதால் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வாதிகளின் வழக்கு செலவுத்தொகையுடன் தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.